1993 டிசம்பர் 31]

108--

நரிமணத்தில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி சிறுதொழில்கள் துவங்குதல்.

***15672-டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நன்னிலம் தொகுதி, நரிமணம் பகுதியில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி சிறுதொழில்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நரிமணம் பகுதியில் கிடைக்கின்ற எரிவாயுவைப் பயன்படுத்தி சிறு தொழில்கள் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணம் பகுதியில் அபரிமிதமாகக் கிடைக்கும் இயற்கை எரி வாயுவைச் சேமித்து வைக்க முடியாமல் எரியவிடப்படுகிறது. ஆனால் அண்டை மாநிலமான புதுவையில் அந்த இயற்கை எரி வாயுவைப் பயன்படுத்தி வாஞ்சூரில் கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ் என்ற நிறுவனமும், திருநள்ளாரில் ஸ்பிக் நிறுவனமும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே நமது மாநிலத்தில் கிடைக்கின்ற இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வரும் ஆண்டிலாவது சிறு தொழில்களை நிறுவ அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உற்பத்தி ஆகின்ற எரிவாயு அளவுக்கு, ஏற்கெனவே பல்வேறு தொழிற்சாலைகளை அவர்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்கள். ஆகவே வருகின்ற காலத்தில் எரிவாயு அதிகமாக உற்பத்தியாகி, மீதம் ஆகின்ற நிலை ஏற்பட்டால், அப்போது இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 109, திருமதி அ.தி. சரஸ்வதி; மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.